சிசி.எண்.104/2020        நாள்: 31.07.2023
ம.சா.1 புவனேஸ்வரி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்குவிசாரணை:**

1. 2013 முதல் நான் எதிரி சேர்ந்து வாழ நீதிமன்றம் மூலம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி மாண்புமிகு தேவகோட்டை சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு என் மீது தாக்கல் செய்தார் என்றும் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால் மாண்புமிகு சிவகங்கை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு அங்கு விவாகரத்து வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் நாங்கள் மாண்புமிகு சென்னை நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன்.

2. 1வது எதிரி 5வது எதிரியுடன் கள்ளத்தொடர்பு வைத்துக்கொண்டு வாழ்ந்துள்ளதாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றும் எந்த தேதியில் இருந்து வாழ்ந்து வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பல வருடங்களாக கள்ளத்தொடர்பில் இருந்து வந்துள்ளார். 1வது எதிரிக்கும் 5வது எதிரிக்கும் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றும் யார் எனக்கு தகவல்சொன்னது என்றும் சொன்னால் 03.03.2019ம்தேதி திருமணம் நடந்தது. கள்ளமணக்குடியைச் சேர்ந்த பாண்டியன் என்பவர் தகவல் சொன்னார். 1வது எதிரியின் வீட்டில் வைத்து 5வது எதிரியை 1வது எதிரியை திருமணம் செய்து கொண்டார் என சொன்னார். மேற்படி திருமணத்திற்கு மேற்படி பாண்டி என்பவர் சென்றாரா என்றால் சென்றதாக 17.10.2019ம் தேதி என் அப்பாவிடம் சொல்லி என்னிடமும் சொன்னார்.

3. பாண்டியன் எதற்காக 1வது எதிரி 5வது எதிரியை திருமணம் செய்ததை எதற்காக உடனடியாக என்னிடம் சொல்லவில்லை என்றால் என்னை பற்றி பாண்டியனுக்கு தெரியாததால் சொல்லவில்லை. பாண்டியன் என் அப்பாவிற்கு பழக்கமானவர். மனுவில் 22.09.2019ம்தேதி 1வது எதிரியின் வீட்டிற்கு நானும், எனது பெற்றோரும் சென்று சேர்ந்து வாழ வேண்டும் என கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றும் அப்போது 5வது எதிரி 1வது எதிரியின் வீட்டில் இருந்தாரா என்றால் இருந்தார். அந்த சமயத்தில் 5வது எதிரி கர்ப்பமாக இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. 1வது எதிரிக்கும் 5வது எதிரிக்கும்

குழந்தை பிறந்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 18.03.2020ம் தேதி தான் எனக்கு தெரியும். ராஜேந்திரன் என்பவர் எனக்கு சொன்னார். 1 மற்றும் 5வது எதிரிக்கு 05.03.2020ம் தேதி குழந்தை பிறந்துவிட்டது என்றால் சரிதான். 1வது எதிரிக்கும், 5வது எதிரிக்கும் கள்ளத்தொடர்பு வைத்திருந்தார் என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் ஆனால் அவர்களுக்குள் திருமணம் நடந்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் 1வது எதிரிக்கும் 5வது எதிரிக்கும் திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்று சென்னனால் சரியல்ல. நான் 1வது எதிரியின் பெற்றோர்களை பராமரிக்கவில்லை என்றும் அவர்களை பராமரிக்க 5வது எதிரியை வேலைக்கு வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வேலைக்கு வந்த 5வது எதிரிக்கும் 1வது எதிரிக்கும் தொடர்பு ஏற்பட்டு குழந்தை பிறந்தது என்றும் திருமணம் நடந்ததன் அடிப்படையில் குழந்தை பிறக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. எனக்கும் 1வது எதிரிக்கும் இடையே ஏற்படுகிற குடும்ப பிரச்சனைகளில் 4வது எதிரி தலையிட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரச்சனைகள் அனைத்திற்கும் அவர் தான் காரணம். 4வது எதிரி திருமணமாகி அவரது குடும்பத்துடன் தேவகோட்டையில் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 2 மற்றும் 3வது எதிரிகள் பல வருடங்களாக நோய் வாய்ப்பட்டு உடல்நலக்குறைவாக உள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை நான் வாங்கி வைத்துக்கொண்டு 1வது எதிரியுடன் வாழாமல் அவரையும் வாழ விடாமல் பல்வேறு வழக்குகளை தாக்கல் செய்து புகார் மனுவை கொடுத்தும் வருகிறேன் என்றால் சரியல்ல.

6. 1வது எதிரிக்கும் எனக்கும் நடைபெற்ற பிரச்சனைகளில் சம்மந்தமில்லாத மற்ற எதிரிகளையும் சேர்த்து புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் 1வது எதிரிக்கும் 5வது எதிரிக்கும் திருமணம் நடைபெறவில்லை என்பதால் இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் 1வது எதிரிக்கும் 5வது எதிரிக்கும் திருமணம் நடைபெற்றதாக சொல்லும்தேதி மற்றும் சாட்சிகள் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.